# வள்ளுவர் சுட்டும் ஈகை உணர்வு

முனைவர். இர.பிருந்தாவதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, சென்னை

9

**ஆய்வுச்சுருக்கம்**

மனித உணர்வுகளில் சிறப்பான ஒன்று ஈகை. மனித மனதோடு தொடர்புடையது. மனம் சார்ந்த இவ்வுணர்வு பழந்தமிழ் இலக்கியங்களில் பரவி கிடக்கின்றது. அற இலக்கியங்களில் முதன்மையாக எண்ணப்படும் திருக்குறளில் அறத்துப்பாலில் ஈகை என்ற அதிகாரத்தில் இவ்வுணர்வு வள்ளுவரால் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஈகை என்றால் என்ன, ஈகை உணர்வால் கிடைக்கும் இன்பம், நன்மை, சமூக மேன்மை, செல்வத்தை கொடுக்காததால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**ஆய்வு நோக்கம்**

தற்காலத்தில் மனிதன் பல்வேறு அறிவியல் வளர்ச்சியின் ஊடாக சமூக நலன், பிறர் நலன், என்பதை மறந்து தன் குடும்பம், தன் வளர்ச்சி என்பதை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் ஈகை என்ற தலையாய மனித உணர்வினை நினைவூட்ட வேண்டிய சூழலில் உள்ளோம். தான் தனது என்பதைத் தாண்டி பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் தலையாய பண்பினை நாம் அனைவரும் மீட்டெடுக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம். சமூக வளர்ச்சியின் அடி நாதமாக விளங்கும் ஈகை உணர்வு பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக, திருக்குறளில் இடம்பெற்றுள்ளதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திறவுச்சொற்கள்:** கடுமா, இன்னார், ஊரணி, ஜென்மம், ஈகை.

**முன்னுரை**

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் கடைபிடிக்க வேண்டிய அற உணர்வுகளில் ஒன்று ஈகை. அறம் மண்ணில் வாழும் உயிர்களுக்கு எல்லாம் உணவும் உடையும் உறைவிடமும் கொடுப்பதே சிறந்த அறம் என்று மணிமேகலை கூறுகின்றது. அறம் என்ற சொல்லுக்கு எட்டு வகையான பொருட்கள் தமிழில் வழங்கப்பட்டு வருகின்றன. அவை முறையே வழக்கம், ஒழுக்கம், கடமை, நீதி, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என அமையும் என்பார் அறிஞர். (திருக்குறள் நீதி இலக்கியம் பக்கம் 24) இவற்றுள் ஈகை என்ற உணர்வு மனிதப் பண்புக்கு

இலக்கணமாக அமைவது. ஒன்றை வேண்டுபவருக்கு அவர் தேவையை அறிந்து இல்லை என்று கூறாமல் கொடுப்பதே ஈகை. பிறரின் நலன் காக்கும் ஈகை தமிழரின் அடிப்படை அற உணர்வுகளில் ஒன்று. பல்வேறு இலக்கியங்களில் ஈகை குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. திருக்குறளில் அறத்துப்பாலில் ஈகைக்கு என்று வள்ளுவர் ஒரு தனி அதிகாரத்தை வகுத்துள்ளார்.

**ஈகை**

மனிதன் பிறர் நலம் கருதுவதையே ஈகை என்கிறோம். இந்த ஈகை மனிதனின் அடிப்படை உணர்வாகும். பொதுவாக மனிதர்களிடத்து இருக்க வேண்டிய ஓர் உயர்ந்த பண்பு ஈகை திருக்குறளுக்கு அடுத்ததாகக் கூறப்படும் அற நூல்களில் ஒன்றான நாலடியார் ஈகைக்கு என்று ஒரு அதிகாரம் வகுத்துள்ளது. அடுத்த பிறவியில் மகிழ்ச்சியாக வாழ, சொர்க்கத்தில் இடம் கிடைக்க ஈகை அவசியம் (குறள்.189) என்று கூறுகின்றது. புறநானூற்றில் நக்கீரர் ஈகையின் சிறப்பை "கடுமா பார்க்கும் கல்லா ஒருவற்கும் உண்பது நாழி உடுப்பவை இரண்டே" என்று கூறுகின்றார். ஆனால் வள்ளுவரோ பலன் எதிர்பாராது இல்லாத ஒருவருக்கு உதவுவதே ஈகை என்று கூறுகின்றார். (குறள் 221)

வறுமையின் பொருட்டு குமணனிடம் சென்ற பெருஞ்சித்திரனார் தான் பெற்ற பொருளைத் தன் மனைவியிடம் கொடுத்து இன்னார் என்னாது என்னோடும் சூழாது வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும் எல்லோருக்கும் கொடு என்று கூறுகின்றார். தன்னுடைய வறுமையான சூழலில் தான் பெற்ற பரிசுப் பொருளை வறுமையில் வாடும் பிறருக்கு இன்னார் இனியார் என்று பாராது வழங்குமாறு கூறுவதே சிறந்த ஈகை. உதவுதல் என்பது செல்வம் மட்டும் அல்லாது தேவையானவற்றைத் தேவையானவருக்குத் கொடுப்பது என்ற பொருளிலே வள்ளுவர் கையாளுகின்றார். புறநானூற்றில் முட மோசியார் ஆய் அண்டிரனின் ஈகை திறனைக் கூறும் பொழுது இப்பிறவியில் பிறருக்கு உதவி செய்தால் அடுத்த பிறவியில் தனக்கு நலன் விளையும் என்று கருதாது பிறருக்கு கொடுக்கக் கூடியவன் என்று கூறுகின்றார். (புறம்.134)

இறந்த பிறகு மேல் உலகம் இல்லை என்றாலும் ஈதலே அனைத்து அறங்களிலும் சிறந்தது என்று கூறுகிறார். அதிலும் தன்னிடம் ஒருவன் இல்லை என்று கூறுவதற்கு முன்பே அவனுக்குக் கொடுப்பதே தலை சிறந்த ஈகை. தன்னிடம் பொருள் பெற்ற பின்பு பிறரிடம் சென்று கேட்காத வண்ணம் ஒருவருக்கு உதவுவதே சிறப்பானது என்று கூறுகின்றார். (குறள்.223) பெருஞ்சித்திரனார் குமணனின் வள்ளல் தன்மையைக் கூறும் பொழுது தன்னிடம் வருபவருக்கு இல்லை என்று கூறாது பொருள்களை அளிப்பவன் என்றும் அவனிடம் பரிசல் பெற்றவர்கள் பிறரிடம் சென்று பரிசல் பெறாத வண்ணம் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுப்பவன்

என்று கூறுகின்றார். (புறநானூறு. 163) கலித்தொகையில் பாலைக்கலியில் தம் இல்லத்திற்கு உதவி கேட்டு வருபவர்களுக்கு இல்லை என்று கூறாது உதவுவதற்காகவே தலைவன் தலைவியை விட்டு பிரிந்து பொருள் ஈட்ட சென்றிருப்பதற்காகக் கூறப்படுகின்றது. தன் குடும்பத்தோடு மகிழ்ச்சியாக வாழ்வதோடு ஈகை என்பது இல்லறத்தின் ஒரு சிறப்பு என்பதால் தலைவன் பொருள் ஈட்ட பிரிந்து செல்கின்றான்

**செல்வம்**

ஈகை குணமுடைய செல்வந்தர்களை வள்ளுவர் ஊரணி நீர், உள்ளூர் பழுத்த மரம் என்று கூறுகின்றார். பிறருக்கு உதவும் எண்ணம் இல்லாத ஒருவரிடம் கோடிக்கணக்காக செல்வம் இருந்தாலும் பயனில்லை. கொடுக்காதவன் செல்வத்தை நச்சு மரம் என்று குறிப்பிடுகின்றார் (குறள்.1008). பிறருக்குக் கொடுக்கும் குணம் இல்லாதவன் தானும் அனுபவிக்காது பிறருக்கும் கொடுக்காது சேர்த்து வைத்த செல்வம் அவரின் மறைவுக்குப் பின் கொடுக்கும் குணம் இல்லாத செலவு செய்யத் தெரியாத ஒருவரிடம் மாட்டி மக்களுக்கு நஞ்சாக அமையும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

**பசிப்பிணி**

பசி என்பது மற்ற இன்பங்களை அழித்து வருவது என்பதால் பசிப்பிணி என்று கூறுகிறார். பசி என்னும் பிணி நம்மை வருத்தும் பொழுது மற்றவரிடம் உணவு கேட்காமல் இருப்பது வலிமையானது. அதைவிட மற்றவருடைய பசிப்பிணியைப் போக்குவதே சிறந்த வலிமை என்று வள்ளுவர் கூறுகின்றார் இந்த ஜென்மத்தில் யார் ஒருவர் மற்றவருக்கு உதவுகிறார்களோ அவர்களுக்கே அடுத்த ஜென்மத்தில் உணவு கிடைக்கும் என்று நாலடியார் கூறுகின்றது இதனை வள்ளுவர் பகுத்து உண்டு வாழ்பவனைப் பசி என்னும் பிணி தீண்டாது என்று கூறுகின்றார். புறநானூற்றில் ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர் ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று என்று ஈகையின் சிறப்பைக் கழைதின் யானையார் கூறுகின்றார். (புறநானூறு.204)

**வறுமையிலும் ஈகை உணர்வு**

மனிதன் பிறர் நலம் கருதுவதையே ஈகை என்கிறோம். இந்த ஈகை மனிதனின் அடிப்படை உணர்வாகும். பொதுவாக மனிதர்களிடத்து இருக்க வேண்டிய ஓர் உயர்ந்த பண்பு ஈகை. தன்னிடம் பொருள் குறைவாக இருந்தாலும் மற்றவர்களுக்கு இல்லை என்று சொல்லாத ஒரு உயர்ந்த பண்பே ஈகை. ஒருவன் பிற்காலத்தில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு பொருளை சேமிப்பதை விட பசியால் வாடுபவருக்கு உணவு அளித்து அதன் மூலம் வரும் மகிழ்ச்சியை சேமித்து வைப்பது வாழ்வில் சிறந்தது என்று ஈகையால் வரக்கூடிய சிறப்பினை வள்ளுவர் கூறுகின்றார். (குறள்.226)

பசியால் வருந்துபவர்களுக்குத் தன்னிடம் உள்ள உணவைப் பகிர்ந்து உண்பவனுக்குப் பசி என்னும் நோய் வருவதில்லை. இப்படிப்பட்ட உயர்ந்த ஈகையின் சிறப்பினை அறியாதவர்கள் தாங்கள் மட்டும் இருந்து தனியாகத் தன் செல்வங்களை அனுபவிப்பர்.

**முடிவுரை**

ஈகை என்ற உணர்வு, செல்வம் அதிகம் இருப்பவரிடம் இருப்பது அல்ல. ஆனால் வெளிப்பாட்டில் இருந்து உருவாவது ஈகை என்னும் உயர் பண்பு, தனிமனிதப் பண்பாக அமைகின்றது தனிமனித எண்ணத்தின் வெளிப்பாடாக இருந்தாலும் சமூகப் பயன் கருதியது. ஒருவரால் இன்னொரு மனிதன் மகிழ்வுடன் வாழ்கின்றார் என்ற உயர்ந்த நோக்கமே ஈகை உணர்வின் அடிப்படையாகும். அதனால் தமிழ் மக்கள் மட்டுமின்றி உலக மக்கள் அனைவருக்கும் ஈகை என்பது பொதுவாக அமைய வேண்டிய ஓர் உயர்ந்த உணர்வாகும் வள்ளுவர் இந்த ஈகை உணர்வினை உலக மக்கள் அனைவரும் ஏற்கும் வண்ணம் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார் என்பதால் திருக்குறள் உலகம் போற்றும் ஒரு நூலாக அமைகின்றது.

**துணை நூல்கள்**

1. சாமி சிதம்பரனார், வள்ளுவர் வாழ்ந்த காலம்

2. தி. வெ. ரா , திருக்குறள் ஒரு சமூக பார்வை

3. பரிமேலழகர் உரை, திருக்குறள்

4. மாணிக்கம்மாள் பிச்சை. வே, திருக்குறள் கூறும் வாழ்வியல் சிந்தனைகள்